## ஒப்ஸ் காசாக்: வங்சா மாஜுவில் அந்நியர்களின் கடைகளை

# மாநகர் மன்றம் பறிமுதல் செய்தது

**நமது நிருபர்**

கோலாலம்பூர், மார்ச் 3- வங்சா மாஜு சந்தை சுற்றுப் பகுதிகளில் சட்டவிரோதமாகக் கடை வைத்து வணிகம் செய்து வரும் அந்நியர்களின் 6 கடைகள் மற்றும் பொருட்களை கோலாலம்பூர் மாநகர் மன்றம் பறிமுதல் செய்தது.

அந்நடவடிக்கையில் 6 கடைகளும் உடனடியாக மூடப்பட்டதோடு 2 உணவு டிரக்குகளும் இழுத்துச் செல்லப்பட்டதாக மாநகர் மன்றம் தெரிவித்தது.

இப்பகுதியில் மேற்கொண்ட நடவடிக்கையில் உரிமமற்ற 6 கடைகள் மற்றும் வணிகர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்ட வேளையில் அந்நிய வணிகர்களுக்கான 12 பறிமுதல் நடவடிக்கைகள், 5 கடைகள் உடனடியாக மூடப்பட்டு, 2 உணவு டிரக்குகள் இழுத்துச் செல்லப்பட்டன.

இச்சோதனை நடவடிக்கையில் தேசிய போலீஸ் படை, கோலாலம்பூர் கூட்டரசுப் பிரதேசக் குடிநுழைவுத் துறை, கோலாலம்பூர் கூட்டரசுப் பிரதேச உள்நாட்டு வாணிப வாழ்க்கைச் செலவினங்களுக்கான அமைச்சு, மாநகர் மன்றத்தின் உள் விவகாரத் துறை ஆகியவை ஈடுபட்டன.

அதே சமயம் இதில் 35 அந்நியர்களைக் குடிநுழைவுத் துறை கைது செய்தது. அவர்களில் ஆவணங்கள் கொண்டிராத அல்லது வேலை பெர்மிட்டை துஷ்பிரயோகப்படுத்திய 1 மியன்மார் ஆடவர், இந்தோனேசிய ஆடவர்கள் (19), இந்தோனேசிய பெண்கள் (15) அடங்குவர் என்று தனது முகநூலில் மாநகர் மன்றம் குறிப்பிட்டது.